# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.154/2017 Date: 28.03.2025.

PW1-பாப்பாள்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்தி இறந்து போன ராமசாமி என் கணவர். விபத்து சம்பந்தமாக நான் தான் போலீஸ் புகார் கொடுத்தேன். புகாரில் என் கணவர் இருசக்கர வாகனத்தில் சென்று ஏற்கனவே விபத்தாகி நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதிவிட்டதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரில் என் கணவர் தான் விபத்திற்கு காரணம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது. அந்த புகாரிலுள்ள சங்கதிகள் பற்றி நான் பின்னிட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். புகாருக்கு பின்னிட்டு குற்ற வழக்கு என்ன ஆனது என்று தெரியாது. ம.சா.ஆ.2 ல் உள்ள விவரங்கள் சரியானது தான். விபத்து நடந்த இடத்தில் சாலை நேராக தான் உள்ளது என்றால் சரியல்ல. வளைவாக உள்ளது. விபத்து நடந்த நேரத்தில் லாரியின் ஓட்டுநர் அங்கிருந்தாரா என்று எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய லாரி ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை பற்றி எனக்கு தெரியும். ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்களுக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் கவனகுறைவு தான் காரணமென்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமான லாரி தார்ரோட்டில் தான் நின்று கொண்டிருந்தது. என் கணவரின் வேலை, வருமானத்தை காண்பிக்க ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் என் கணவரின் இறப்புக்கு காரணம் இல்லை என்பதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் விபத்தின் காரணமாக இறக்கவில்லை என்றாலும் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. விபத்தின் போது என் கணவருக்கு 50 வயது. வயதை காண்பிக்க ஆவணம்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்த விதமான இழப்பீடும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Sd/-பாப்பாள்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.